# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.41/2022** **நாள் : 23.08.2022**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும் இன்று (23.08.2022) கோடம்பாக்கம் மண்டலத்தில் புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும் இன்று (23.08.2022) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-142, மேற்கு சைதாப்பேட்டை, திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் 0.40 எம்.எல்.டி திறன் கொண்ட புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர்.

பின்னர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு - 142ல் அமைந்துள்ள திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் 0.40 எம்.எல்.டி திறன் கொண்ட புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணி இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதன் மூலம் தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுதல் மற்றும் பிரதான கழிவுநீர் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது தடுக்கப்படும். இதன் மூலம் 3,250 பொதுமக்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என உறுதியளிப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையில் குடிநீர் வாரியத்தின் சார்பில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 2 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான சுத்திகரிப்பு நிலையங்கள் (TTRO) ரூ.817.32 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூர் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில், 17 பகுதிகளில் ரூ.754.51 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 8 பகுதிகளில் ரூ.525.77 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 16 பகுதிகள் மற்றும் மாதவரம் பகுதியில் விடுபட்ட தெருக்களுக்கும் பாதாளச் சாக்கடை வசதி அளிக்க திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.2,810 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. மடிப்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.249.47 கோடி மதிப்பீட்டில் 01.08.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.05.2022 அன்று மாத்தூர், ஜல்லடியான்பேட்டை, இடையான்சாவடி, சடையான்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு ரூ.107.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. 13 பகுதிகளில் ரூ.352.82 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை பெருநகர மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டு ரூ.1,070 கோடி மதிப்பீட்டில் தலா 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. கூடுதலாக, பேரூரில் ரூ.6,078.40 கோடி மதிப்பீட்டில் 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

மேலும், அடையாற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு ரூ.125.05 கோடி மதிப்பீட்டில் 10 பணிகள் நடைபெற்று வருகிறது. அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் வடிநிலப் பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு ரூ.401.87 கோடி மதிப்பீட்டில் 36 பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் ரூ.877.37 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் பெருங்குடியில் அமைந்துள்ள 902 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வார்டு-174ல் அமைந்துள்ள கிண்டி, மடுவின்கரை, மசூதி காலனி ஆகிய பகுதிகளுக்கு ரூ.3.27 கோடி மதிப்பீட்டில் 1.10 எம்.எல்.டி திறன் கொண்ட ஒரு புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், வார்டு – 175க்குட்பட்ட வேளச்சேரி ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு ரூ.4.08 கோடி மதிப்பீட்டில் 3 புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் பாலங்கள், சுரங்கப்பாதைகள், கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் அமைப்பது, பசுமையான சூழலை ஏற்படுத்த மரக்கன்றுகள் நடுவது என பல்வேறு திட்டப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தி ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு அனைவருக்கும் முன் உதாரணமாக உள்ளார். அவருக்கு தன்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது தெரிவித்ததாவது :

1996 ஆம் ஆண்டு முதல் மேற்கு சைதாப்பேட்டை பகுதியில் பல்வேறு பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருந்தன. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வரும்போது கூட என்னிடத்தில் ஜோன்ஸ் சாலை சுரங்கப்பாதை, பவளவண்ணன் சுரங்கப்பாதை போன்ற இந்தச் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படாமல் இருந்திருந்தால் இந்த பகுதியில் ஏராளமான

உயிரிழப்புகள் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் எனவும், 1989 ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த அண்ணன் நேரு அவர்கள் இந்த சைதாப்பேட்டை பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வந்து சென்றுள்ளதையும் என்னிடத்தில் தெரிவித்தார்.

இந்தச் சைதைப் பகுதியின் ஒட்டுமொத்த பிரச்சனையும் அவர் அறிந்ததே. சைதாப்பேட்டையில் அமைந்துள்ள ஜோன்ஸ் ரோடு மற்றும் பஜார் தெரு சுரங்கப்பாதை, காந்தி மண்டபம் மேம்பாலம் ஆகியவை வணக்கத்திற்குரிய மேயராக, மாண்புமிகு துணை முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது.

சுப்பிரமணிய தெரு, ஜோன்ஸ் சாலை போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அனைவருக்கும் தெரியும். ஒரு காலத்தில் இந்த ரயில்வே பாதைகளை கடக்கும் போது ஏற்படும் விபத்துகளும், உயிரிழப்புகளும் நீண்ட கால பிரச்சினையாக இருந்து வந்தது. இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கண்டவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்றைய வணக்கத்திற்குரிய மேயர்.

ஆனாலும், சைதை மேற்கு பகுதியில் ஒரு பிரச்சினை மட்டும் தீர்க்கப்படாமலே இருந்தது. அது திவான் பாஷ்யம் தோட்டப் பகுதி. இந்தப் பகுதி 5 முதல் 6 அடி தாழ்வான பள்ளத்தில் அமைந்திருக்கும் பகுதியாகும். இங்கு மழைநீர் வெளியேறுவது மிகவும் சிரமம். அதிலும் மழைக்காலங்களில் கழிவுநீர் கலந்து விடுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

1996ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சனை தொடர்ந்து கொண்டே இருந்தது. என்னதான் மழைநீர் வடிகால் கட்டப்பட்டாலும், மோட்டார் பயன்படுத்தி நீர் வெளியேற்றப்பட்டாலும், இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படவில்லை. ஜனவரி மாதம் 26, 2022 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களை சந்தித்து, இந்தப் பகுதியில் மழைநீர் தேக்கம் குறித்து விளக்கி இந்த பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன்.

ஜோன்ஸ் சாலை, சுப்பிரமணிய தெரு போன்ற பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்து, சென்னை குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு உடனடியாக திட்ட மதிப்பீடு தயாரிக்க உத்தரவிட்டார். அவர் எப்பொழுதெல்லாம் அதிகாரிகளை சந்திக்கிறாரோ அப்போதெல்லாம் இந்தச் சைதைப் பகுதியில் புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் திட்டம் என்ன ஆனது என்று அவர்களை வேகப்படுத்திக் கொண்டே இருந்தார்.

கடந்த இரண்டு வாரத்திற்கு முன்னதாக கூட மசூதி காலனி தெருவில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டியுள்ளார். அந்த வகையில் சைதைப் பகுதியில் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் எங்களுக்கு உறுதுணையாக உள்ள அண்ணன் நேரு அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் அவர்கள் பேசிய போது, இந்தப் பகுதியில் மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளதால் கழிவுநீர் வெளியேற்றும் குழாய்களை 350 மீட்டருக்கு பிரதான குழாய்களாக மாற்றும் பணிகளும், மசூதி காலனி வழியாக அடையாறு ஆற்றங்கரையில் உள்ள பம்பிங் ஸ்டேஷனுக்கு செல்லும் குழாய்களை 700 மீட்டர் தூரத்திற்கு பிரதான குழாய்களாக

மாற்றி அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மகிழ்ச்சியான தகவலை தெரிவித்தார்.

நூறாண்டு கால பிரச்சனைகளுக்கு நம்முடைய ஆட்சிக் காலத்தில் ஓராண்டில் தீர்வு காணப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது, 2017ஆம் ஆண்டு ஜூலை 1ல் நம்முடைய சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் “பசுமை சைதை” என்கின்ற திட்டம் தொடங்கப்பட்டது.

அப்பொழுது பூவரசன் மற்றும் புங்கம் போன்ற பாரம்பரிய நாட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு பசுமையான சைதாப்பேட்டையை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஒரு இலட்சத்து ஒன்றாவது மரக்கன்று வேளச்சேரியில் நம்முடைய மதிப்பிற்குரிய இளைஞரணி செயலாளர் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த மாதம் நடவு செய்தார் என்பது மேலும் சிறப்புக்குரிய விஷயம். மேலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு பசுமை சைதை திட்டத்தில் 50,000 தென்னங்கன்றுகள் அனுப்பி வைக்கப்பட்டு நடவு செய்யப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையின் மூலம் அரசின் உதவித்தொகைகளான முதியோர் ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கான ஓய்வூதியம், முதிர் கன்னிகள் போன்ற 1,500 நபர்களுக்கு ஒரே நேரத்தில் நலத்திட்ட உதவிகள், சுமார் 3,500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் வேலை வாய்ப்புகள் ஆகியவை இந்தச் சட்டமன்ற தொகுதியிலே பெற்றுத் தரப்பட்டுள்ளது என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார் அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்) அவர்கள், திரு.ஆர்.துரைராஜ் (அடையாறு) அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்